அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

# ஆண்டு 11

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: 29.01.2022** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. உயிர்மெய் நெட்டெழுத்துகளின் எண்ணிக்கை
   1. தொண்ணூறு
   2. இருநூற்றுப்பதினாறு
   3. இருநூற்று நாற்பத்தேழு
   4. நூற்று இருபத்தாறு

2. வாசிப்புப்பழக்கம் மாந்தருக்குப் பரந்த அறிவைத் தரும். இச்சொல்லியத்தில் வந்துள்ள அடைமொழி
   1. எழுவாய் அடைமொழி
   2. பயனிலை அடைமொழி
   3. செயப்படுபொருள் அடைமொழி
   4. அடைமொழி இல்லை

3. பகுதி, விகுதி என்னும் இரு உறுப்புகள் கொண்ட பகுசொல்
   1. படித்தான்
   2. உண்ட
   3. கூனி
   4. நிலம்

4. உயிரளபெடை பெற்றுவந்த சொல்
   1. இலங்ங்கு வெண்பிறை
   2. தொழாஅள்
   3. சுட்ட பழம்
   4. நாகியாது

5. தூது, கலம்பகம், அந்தாதி போன்றன
   1. பெருங்காப்பியங்கள்
   2. மேற்கணக்கு நூல்கள்
   3. கீழ்க்கணக்கு நூல்கள்
   4. சிற்றிலக்கியங்கள்

6. வீரன் "தாயகத்தை மீட்பேன்" எனச் சூளுரைத்துச் சென்றான். சூளுரைத்தல் என்பது
   1. ஏமாற்றுதல்
   2. உண்மை பேசுதல்
   3. உறுதி கொள்ளதல்
   4. வியப்படைதல்

7. குறுந்தொகை எனும் நூல் அடங்கும் சங்க இலக்கியத்தொகுப்பு
   1. எட்டுத்தொகை
   2. பத்துப்பாட்டு
   3. பக்தி இலக்கியம்
   4. அறநூல்

1 2 3 4

8. இந்திய மொழிகளுக்கு மூலமும் வேருமாக விளங்கும் மொழி
   1. கன்னடம்
   2. தமிழ்
   3. தெலுங்கு
   4. மலையாளம்

9. ஒரு சொல்லியத்தில் எழுவாயைக் கண்டறிவதற்குரிய வினாச்சொற்கள்
   1. யாரை, எதை
   2. ஏன், எதை
   3. எப்படி, எப்பொழுது
   4. யார், எது

10. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை, இறந்தகாலச் சொல்
    1. எழுதினார்கள்
    2. ஓடின
    3. பாடுகிறார்கள்
    4. சிரித்தீர்கள்

11. தத்தம் பொருள் உணர்த்தும் ஓர் இடைச்சொல்
    1. இல
    2. ஐ
    3. தான்
    4. தவ

12. தொல்லியலாளர்கள் அகழ்வாய்வுகளில் ஈடுபட்டனர். இச்சொல்லியம்
    1. வினா
    2. மெய்ப்பாடு
    3. கூற்று
    4. ஏவல்

13. உயிர்த்தொடர்க்குற்றியலுகரப் புணர்ச்சி பெற்று வந்த சொல்
    1. அழகியல்
    2. பட்டாடை
    3. வண்டினம்
    4. காதணி

14. மெய்யெழுத்துகளை ஒலிக்க எடுக்கும் காலஅளவு
    1. அரை மாத்திரை
    2. ஒரு மாத்திரை
    3. இரண்டு மாத்திரை
    4. மூன்று மாத்திரை

1 2 3 4

15. ‘தமிழ் ஒரு செம்மொழி’ என்று முதன்முதல் கூறிய வெளிநாட்டு அறிஞர்
    1. இராபர்ட் கார்டுவெல்
    2. எல்லிஸ்
    3. இராபர்ட் டி. நொபிலி
    4. யி. யு. போப்

16. கிண்டலும் கேலியும் நிறைந்த வசைப்பாடல்களை உடனுக்குடன் பாடுவதில் வல்லவர்
    1. அருணகிரிநாதர்
    2. உமறுப் புலவர்
    3. தாயுமானவர்
    4. காளமேகப்புலவர்

17. ‘உலகப்பொதுமறை’ என்னும் சிறப்புப்பெயர் பெற்ற நூல்
    1. நாலடியார்
    2. தொல்காப்பியம்
    3. சிலப்பதிகாரம்
    4. திருக்குறள்

18. சிப்பிக்கண் இருந்த முத்து. இதில் கண் என்பது
    1. 3 ஆம் வேற்றுமையுருபு
    2. 5 ஆம் வேற்றுமையுருபு
    3. 6 ஆம் வேற்றுமையுருபு
    4. 7 ஆம் வேற்றுமையுருபு

19. வான் முகில் வழாது பெய்க! இச்சொல்லியத்தின் பொருள்
    1. விதித்தல்
    2. வேண்டுதல்
    3. வைதல்
    4. வாழ்த்துதல்

20. ‘ஒரு தோழனின் காதற்கடிதம்’ என்ற கவிதையின் ஆசிரியர்
    1. கவிஞர் நாவண்ணன்
    2. கவிஞர் புதுவை இரத்தினதுரை
    3. கவிஞர் அறிவுமதி
    4. கவிஞர் காசி ஆனந்தன்

21. ‘தேரா மன்னனைக் கண்டு முறை கேட்பேன்’ எனச் சூளுரைத்தவர்
    1. மாதவி
    2. மணிமேகலை
    3. கண்ணகி
    4. கவுந்தியடிகள்

1 2 3 4

22. பிரிவாற்றாமை என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. பிரிவாற்று + ஆமை
    2. பிரிவு + ஆற்றாமை
    3. பிரிவு + அற்றமை
    4. பிரிவகற்று + ஆமை

23. தமிழிலக்கிய வரலாற்றில் மக்கள் சார்ந்த இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலம்
    1. நாயக்கர்காலம்
    2. காப்பியகாலம்
    3. பக்திஇலக்கியகாலம்
    4. அறநீதிநூற்காலம்

24. இலக்கியங்களைப் படிப்பதற்குப் பலரையும் தூண்டும் ஊக்கியாக அமைவது
    1. இலக்கியப்பொழில்
    2. இலக்கியத் திறனாய்வு
    3. அணிந்துரை
    4. காட்சிப்படுத்தல்

25. சிலப்பதிகாரத்துக்குச் சிறந்த உரையை எழுதியவர்
    1. பரிமேலழகர்
    2. நச்சினார்க்கினியர்
    3. அடியார்க்கு நல்லார்
    4. இளம்பூரணர்

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வினாக்களுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. செம்மொழிகள் எனச் சிறப்புப்பெற்ற மொழிகளுள் நான்கினை எழுதுக.

2. சங்ககால இலக்கியங்களிலிருந்து அறியக்கூடிய செய்திகள் இரண்டு எழுதுக.

3. திறனாய்வுக் கலை என்றால் என்ன?

4. சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து - இக்குறளின் பொருளை எழுதுக.

5. வியங்கோள் சொல்லியம், ஏவற்சொல்லியம் ஆகியவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுச் சொல்லியம் எழுதுக.

6. உருவக அணி, உயர்வு நவிற்சி அணி ஆகியவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

7. அடுக்குத்தொடர், அடுக்கிடுக்குத்தொடர் - இவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தந்து சொல்லியம் எழுதுக.

(5x2 = 10 புள்ளிகள்)


**3. கீழ்க்காணும் பாடலை வாசித்துப் பொருளுரை எழுதுக.**

இளையோர் சூடார்! வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்! பாடினி அணியாள்!
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே!

- குடவாயில் கீரத்தனார்

(3 புள்ளிகள்)

**4. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. 

2. தாயன்பு

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(4 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, அதன் மூன்றிலொன்று பங்காகச் சுருக்கி எழுதுக.**

உலகம் பாரிய சூழல் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. மனிதச் செயற்பாடுகளே சூழல் நெருக்கடிகளுக்கு முதன்மைக் காரணங்களாகும். உலகம் வெப்பமடைதல், துருவப் பகுதிப் பனிப்பாறைகள் உருகுதல் போன்ற காரணங்களால் கடல் மட்டம் உயர்ந்து வருகின்றது. இது கரையோர நிலம் அரிக்கப்பட வாய்ப்பாக அமைகிறது. மாக்கடலுக்குள் துளையிட்டு ஆழ்குழாய்களைச் செலுத்தி நிலநெய் எடுக்கும் செயற்பாடுகளால் நிலநடுக்கம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. அணு உலைக்கழிவுகளால் நிலம், நீர் என்பன மாசுபடுகின்றன. அத்தோடு, ஓசோன்படலம் பெருமளவு பாதிக்கப்படுகிறது. இன்றைய அறிவியல் மாந்த வாழ்வைப் புதிய பரிணாமத்துக்கு இட்டுச்சென்றுள்ளது. ஆனாலும், புவியில் உயிரினம் வாழ இயற்கை அளித்த வளங்களைப் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாக்கி வருகின்றது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, மாந்தர் ஒவ்வொருவரும் விழிப்புணர்வு கொண்டு, தம்மையும் தமது சூழலையும் பேணிக்காத்து, அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்புக்குரியவர்கள் ஆகின்றார்கள்.

(4 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் பந்தியை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**வாடிக்கையாளருக்கு ஓர் அறிவித்தல்**

வாடிக்கையாளர்களே! நோய்த்தொற்றுச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பெருமளவிலான வாடிக்கையாளர் ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பதற்காக மாற்றுத் திட்டமொன்றை எமது வாடிக்கையாளருக்கு நாம் வழங்குகின்றோம். நீங்கள் விரும்பும் பொருள்களை இணையவழியாக முன்பதிவு செய்து உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். எமது இணையத்தளத்தில் விபரங்களைப் பார்வையிடலாம். அதிலுள்ள பட்டியலைச் சொடுக்கி, நீங்கள் வாங்க விரும்பும் பொருள், அளவு, அனுப்புனர் முகவரி போன்ற விபரங்களை நிரப்பி மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்புங்கள். வங்கியினூடாகப் பணத்தினைச் செலுத்தலாம். தவணை முறையில் பணத்தினைச் செலுத்தும் வாய்ப்பினையும் நாம் உங்களுக்கு வழங்குகின்றோம். உங்கள் நண்பர்களுக்கும் இதனை தெரியப்படுத்துங்கள்.

"அனைவருக்கும் இனிய தமிழர் திருநாள் வாழ்த்துகள்".

(4 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப் பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. தமிழ் ஒரு செம்மொழி
2. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதனைக் கருப்பொருளாகக் கொண்டு ஒரு சிறுகதை எழுதுக.
3. தாயகத்தில் எம் சொந்தங்களின் இடர்நிலை

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- எங்கள் தாயகமும் வாழ்க்கை முறையும்
- தற்போதுள்ள இடர் நிலைக்கான காரணங்கள்
- அவர்களுக்குப் புலம்பெயர் தமிழர்கள் ஆற்றக்கூடிய பணிகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழில் காலத்திற்குக் காலம் பல இலக்கிய, இலக்கண நூல்கள் எழுதப்படுகின்றன. இருந்தபோதிலும் தமிழிலக்கணத்திற்கு அடிப்படையாக இன்றுவரை தொல்காப்பியமே இருந்து வருகிறது. காலத்தால் முந்திய இலக்கணநூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்க காலமாகிய கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் தொல்காப்பியர் ஆவார். இவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவற்றிற்கு இலக்கணம் கூறியுள்ளார். நிலங்களை ஐந்தாக வகுத்து அந்தந்த நிலங்களுக்குரிய மக்களின் வாழ்க்கை முறைகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளார். இதனைப் பொருளிலக்கணம் என்பர். பொருளிலக்கணம் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்பதாவது இயலாக மரபியல் அமைகிறது. தொல்காப்பியர் ஓரறிவு தொடக்கம் ஆறறிவு வரையாக உயிரினங்களைப் பாகுபாடு செய்துள்ளார். மரம், புல் போன்றவற்றை ஓரறிவுடையவை என்றும் அவை தொடுதல் உணர்வை மட்டும் உடையவை என்றும் கூறுகிறார். வெளியே தசைப்பற்றும் உள்ளே தசை அற்றதாக உள்ளது புல் என்றும் உள்ளே தசைப்பற்றும் வெளியே தசைப்பற்று அற்றதாக உள்ளது மரம் என்றும் வகுத்துள்ளார்.

1. தொல்காப்பியர் எவற்றிற்கு இலக்கணம் கூறியுள்ளார்?

   ________________________________________

2. தொல்காப்பியம் எழுதப்பட்ட காலப்பகுதி எது?

   ________________________________________

3. பொருளிலக்கணம் எவற்றை வகுத்துக் காட்டுகிறது?

   ________________________________________

4. ஓரறிவுடையவை எவையெனத் தொல்காப்பியர் கூறுகிறார்?

   ________________________________________

5. மரபியல் எவ்விலக்கண வகைக்குள் அடங்குகிறது?

   ________________________________________

6. மரம் என்பதை தொல்காப்பியர் எவ்வாறு வரையறை செய்கிறார்?

   ________________________________________

7. உயிரினங்களைத் தொல்காப்பியர் எவ்வாறு பாகுபாடு செய்துள்ளார்?

   ________________________________________

(7×1=7 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றிற்குப் பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து கோட்டில் எழுதுக.**
**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- கணினிப்பயிற்சி வகுப்பு
- விழிப்புணர்வு
- மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
- கணினிப்பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு ஓர் அறிவித்தல்

அ. ______________________________

கணினி விளையாட்டுகளுக்கான இலவச வகுப்புகள் எதிர்வரும் மாசி 8ஆம் நாள் தொடங்குகிறது. கணினிப்பயிற்சிப் பள்ளியில் இணைந்து கற்று வரும் மாணவர்களுக்கு மட்டுமே இச்சிறப்பு வகுப்பு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. பிற்பகல் 14:00 – 16:00 மணி வரை வகுப்பு நடைபெறும். தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

ஆ. ______________________________

பெற்றோர் பலரின் வேண்டுகோள்களுக்கிணங்க எதிர்வரும் தை மாதம் 4ஆம் நாள் கணினி வகுப்புகள் தொடங்குகின்றன. மாணவர்களின் இணையவழிக் கல்விக்கு உறுதுணையாகப் பெற்றோரும் கணினிப் பயிற்சிகளை எடுத்துக் கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர். அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சனி, ஞாயிறு நாள்களில் வகுப்புகள் நடைபெறும்.

இ. ______________________________

இணையவழிக் கல்வியின் அறிமுகத்தினால் மக்களிடையே கணினிப் பயன்பாடு பெருகியுள்ளது. நீண்ட நேரக் கணினிப் பயன்பாடு மக்கள் மனங்களில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அத்துடன் மக்களுக்கிடையேயான நேரடித் தொடர்புகளும் குறைவடைந்து வருகின்றன. எனவே வாரத்தில் ஒருநாளாவது கணினிப் பயன்பாட்டைத் தவிர்த்து குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடவேண்டும்.

ஈ. ______________________________

கணினிப் பயன்பாட்டின் பெருக்கத்தினால் ஒவ்வொரு வீடுகளிலும் ஒன்றிற்கு மேற்பட்ட மடிகணினிகள் உள்ளன. மக்களின் தேவைகளுக்கேற்ப பல்வேறு வகையான வசதிகளுடன் மடிகணினிகள் சந்தைப்படுத்தப்படுகின்றன. நத்தார் விழாவினை முன்னிட்டு எமது நிறுவனத்தினால் மாணவர்களுக்குச் சலுகை விலையில் மடிகணினிகள் வழங்கப்படுகின்றன. முன்பதிவு செய்யுங்கள்! வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

(4×2=8 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| | | எழுதுதல் | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 03 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 04 | | | |
| **7** | 15 | | | |
| | | வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | |
| 1 | 07 | | | |
| 2 | 08 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |